**மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திருச்சிராப்பள்ளி.**

முன்னிலை: **திரு.பா.சரவணன், பி.எஸ்.சி., பி.எல்.,**
மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.

2025 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 19 ஆம் நாள் செவ்வாய்க்கிழமை

**இடைநிலை மனு எண்.6/2024 ல்**

**அசல் வழக்கு எண்.15/2018**

1.S.C. ஜெயலெட்சுமி,
க/பெ T.சந்திரகுமார்,
3–A சின்ன ஆண்டார் வீதி,
குளித்தலை,
கரூர் மாவட்டம்.

2. S. விஜயலெட்சுமி,
க/பெ K.சண்முகம்,
எண்.87 கீழத்தெரு,
கீழகொண்டயம்பேட்டை,
திருவனைக்கோவில்,
திருச்சி. ... மனுதாரர்கள்/வாதிகள்

/ எதிர் /

1. P.பழனிகுமார் மற்றும் 15 நபர்கள் ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனுவானது, கடந்த 05.08.2025 அன்று என் முன்பாக விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. P.சங்கரன், அவர்களும், 1,2 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. K. சிவசங்கரநாராயணன் அவர்களும் முன்னிலையாகியும், 4,5 எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு வாசுதேவன் அவர்கள் முன்னிலையாகியும், 8,9,10,12

எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் N.L.V.லெட்சுமணன் அவர்கள் முன்னிலையாகியும், 6,7,11,13 முதல் 16 வரையான எதிர்மனுதாரர்கள் தோன்றாத்தரப்பாளராக்கப்பட்டும், மனு எதிருரை மற்றும் வழக்காவணங்களை பரிசீலனை செய்தும், இரு தரப்பு வாத பிரதிவாதங்களை கேட்டும், இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் ஆய்ந்து வழங்கும்

## உத்தரவு

1. இந்த மனுவானது, மனுதாரர்கள்/வாதிகளால் உரிமையியல் நடைமுறைச் சட்டம் வகுமுறை 22 விதி 4 மற்றும் 151ன் கீழ் அசல் வழக்கில் இறந்துபோன 3ம் பிரதிவாதி பாலசுப்பிரமணியன் என்பவரின் வாரிசுகளை, அசல் வழக்கில் கூடுதல் 14 முதல் 16 பிரதிவாதிகளாக, சேர்க்க அனுமதி கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. மனுதாரர்கள்/வாதிகள் ,தரப்பில் வாதிட்ட கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில் மனுவில் உள்ள சங்கதிகளையே விவரித்துக் கூறி, மனுதாரர்கள்/வாதிகள் இந்த வழக்கை பாகப்பிரிவினை மற்றும் இதர பரிகாரங்களுக்காக தாக்கல் செய்துள்ளதாகவும், வழக்கு விசாரணை நிலுவையில் இருந்தபோது, 3ம் பிரதிவாதி பாலசுப்பிரமணியன் என்பவர் கடந்த 08.01.2024 அன்று கூடுதல் 14 முதல் 16 பிரதிவாதிகளை வாரிசுகளாக விட்டு விட்டு இறந்து விட்டார் என்றும், கூடுதல் 14 முதல் 16 பிரதிவாதிகள் இந்த வழக்கிற்குத் தேவையான தரப்பினர்கள் என்றும், எனவே மனுவை அனுமதிக்க வேண்டுமென்றும் வாதிட்டார்.

3. 1,2 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில், 3ம் பிரதிவாதி பாலசுப்பிரமணியன், 1ம் பிரதிவாதிக்கும், அவரது தாயாருக்கும் 20.06.1974 தேதியில் உரிய மறுபயனுக்கு ஒரு விடுதலை பத்திரத்தை எழுதிக் கொடுத்து விட்டதாகவும், அதன்பிறகு இந்த சொத்தில் அவருக்கு உரிமையில்லையென்றும், அதனை அடிப்படையாகக் கொண்டு சொத்துக்கள் விற்கப்பட்டுள்ளதாகவும், எனவே, இந்த மனுவை தள்ளுபடி செய்ய வேண்டுமென்றும் வாதிட்டார். இதே வாதம்தான் 4,5 எதிர்மனுதாரர்கள் தரப்பிலும் கூறப்பட்டுள்ளது.

4. இந்த மனுவில் பரிசீலிக்கப்பட வேண்டியது யாதெனில், இந்த மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதாகும்.

5. இருதரப்பு கருத்துகளும், வழக்கு ஆவணங்களும் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன. இருதரப்பிலும் உத்தேச 14 முதல் 16 பிரதிவாதிகள் இந்த வழக்கில் இறந்துபோன 3ம் பிரதிவாதி பாலசுப்ரமணியனின் சட்டப்பூர்வ வாரிசுகள் என்பது ஒப்புக்கொள்ளப்படுகிறது. அதேபோல் மேற்படி 3ம் பிரதிவாதி பாலசுப்ரமணியன் என்பவர் வழக்கு நிலுவையில் இருந்தபோது 08.01.2024 அன்று இறந்து விட்டார் என்பது இருதரப்பிலும் ஒப்புக்கொள்ளப்படுகிறது. அவர் 20.06.1974 தேதியில் உரிய மறுபயனுக்கு விடுதலை பத்திரம் எழுதிக் கொடுத்தாரா? என்பதைப் பொறுத்தும், அவரது வாரிசுகளுக்கு இந்த வழக்கில் ஏதேனும் பரிகாரம் கிடைக்கத்தக்கதா? என்பதைப் பொறுத்தும், அசல் வழக்கில்

தான் தீர்மானிக்க முடியும். எனவே, 3ம் பிரதிவாதி பாலசுப்பிரமணியன் அசல் வழக்கில் தரப்பினராக உள்ளதாலும், அவர் வழக்கு நிலுவையில் இருக்கும்போது இறந்து விட்டதாலும், அவரது வாரிசுகளான 14 முதல் 16 பிரதிவாதிகள் இந்த வழக்குக்கு தேவையான மற்றும் அவசிய தரப்பினராவர். எனவே, நீதியின் நலன் கருதி இந்த மனு அனுமதிக்கத்தக்கதென முடிவு செய்யப்படுகிறது. வழக்குத் தரப்பினர்களின் உரிமை தொடர்பாக, அசல் வழக்கிலேயே முடிவு செய்யப்படுமென முடிவு செய்யப்படுகிறது.

6. **முடிவாக,**

இந்த மனு அனுமதிக்கப்படுகிறது. 3ம் பிரதிவாதி 20.06.1974 தேதியில் உரிய மறுபயனுக்கு விடுதலை பத்திரம் எழுதிக் கொடுத்தாரா? என்பதைப் பொறுத்தும், அவரது வாரிசுகளுக்கு இந்த வழக்கில் ஏதேனும் பரிகாரம் கிடைக்கத்தக்கதா? என்பதைப் பொறுத்தும், வழக்குத் தரப்பினர்களின் உரிமை தொடர்பாகவும், அசல் வழக்கில்தான் முடிவு செய்யப்படுமென முடிவு செய்யப்படுகிறது. மனு செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவு, என்னால் சுருக்கெழுத்தாளருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்தபின், என்னால் சரிபார்க்கப்பட்டு, இன்று 2025 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 19 ஆம் நாள் திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

B.SARAVANAN

Digitally signed by B.SARAVANAN
Date: 2025.08.19 14:01:51 +0530

**மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,**
**திருச்சிராப்பள்ளி.**

மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் : இல்லை.

B.SARAVANAN Digitally signed by B.SARAVANAN Date: 2025.08.19 14:01:59 +0530

**மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,**
**திருச்சிராப்பள்ளி.**